**காரைதீவு பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து காரைதீவு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) சபையின் அலுவலகம் மற்றும் நூலகம் என்பவை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை | காணிகளின் பெறுமதி நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எனினும் அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதிகள் எதிர்வரும் நிதியாண்டிற்கான கணக்கறிக்கையில் தனியாக காட்டப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ii) சபையின் ரூபா 5,400,000 கிரயமான மோட்டார் லொறி 2012 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமுற்று அதற்காக இழப்பீடு பெறப்பட்டிருந்த போதிலும் கணக்குகளில் இவ்வாகனத்தின் கிரயமானது பதிவழிக்கப் பட்டிருக்கவில்லை. | சேதமுற்ற மோட்டார் லொறியின் கிரயப் பெறுமதியானது நிலையான சொத்துக்களின் பெறுமதியிலிருந்து பதிவழிக்கப்பட வேண்டும். | தற்போது குறிப்பிட்ட வாகனம் பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் கி.மா, ஊடாக பகீரங்க ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான விற்பனை தொகையும் அறிக்கையும் இது வரைக்கும் கிடைக்கப்பெறவில்லை, குறிப்பிட்ட அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் எதிர்வரும் நிதியாண்டுக்கான கணக்குகளிலிருந்து பதிவளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (iii) சபைக்கு வழங்கப்பட்ட 02 கல் அமுக்கி மற்றும் 01 கொங்கிறீட் கலவை இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு | வாகனம் மற்றும் இயந்திரங்களின் பெறுமதி நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் | கல் அமுக்கி இயந்திரங்கள் யுனப்ஸ் நிறுவனத்தால் 2009 காலப்பகுதியில் நன்கொடையாக வழங்கப்பட்டவையாகும். குறிப்பிட்ட இயந்திரங்களின் பெறுமதி இறுதி |

| | | |
|---|---|---|
| கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்கறிக்கையில் இணங்காணப்படாத தொகையினுள் காட்டப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் நிதியாண்டிற்கான இறுதி கணக்கறிக்கையில் குறிப்பிட்ட இயந்திரங்களின் பெறுமதிகளை தனியாக காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 9,886,142 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, உரிமைப் புத்தகங்கள், நூலகப் புத்தகப் பதிவேடுகள் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் மற்றும் விபரமான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள் தொடர்பில் இயன்றவரை அவைகளின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து எதிர்வரும் நிதியாண்டிற்கான இறுதி கணக்கறிக்கையில் அவற்றின் பெறுமதிகளை தனித்தனியாக வெளிப்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதினை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) நி.பி 371 | செயலாளருக்கு வழங்கப்பட்ட மூன்று முற்கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சீர்செய்யப்பட வேண்டும். | இறுதி கணக்கறிக்கையில் இத் தொகை பெறவேண்டிய மற்றும் கொடுக்கவேண்டிய முற்பண தொகைகளாக காட்டப்பட்டுள்ளது என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். இதனை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி 571 | ஐந்து வைப்புக்கள் காலங்கடந்த வைப்புக்களாக காணப்பட்ட போதிலும் சபையினால் உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் நிதிப்பிரமானத்தின் பிரகாரம் உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வரமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட வைப்புக்களை எதிர்வரும் நிதியாண்டில் சபையின் வருமான கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,563,514 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,443,891 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 25,000 | 2,500 | 2,500 | 0 | 25,000 | 0 | 0 | 0 |
| வாடகைகள் | 4,325,000 | 3,978,762 | 3,978,762 | 652,725 | 2,550,000 | 2,880,096 | 2,901,026 | 652,725 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,458,000 | 4,045,085 | 3,757,676 | 4,025,105 | 2,558,000 | 1,094,903 | 1,089,334 | 3,737,696 |
| ஏனைய வருமானம் | 6,717,500 | 5,394,791 | 5,394,791 | 0 | 5,560,000 | 2,649,033 | 2,649,033 | 0 |
| | 12,525,500 | 13,421,138 | 13,133,729 | 4,677,830 | 10,693,000 | 6,624,032 | 6,639,393 | 4,390,421 |

**2.2.2 வாடகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) கல்முனை மாநகர சபை, சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் நிந்தவூர் பிரதேச சபைகளினால் கொண்டுவரப்படும் குப்பைகளை காரைதீவு சபையின் எல்லைக்குள் | நிலுவைத் தொகைகளை உரிய சபைகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட | குறிப்பிட்ட நிலுவைகளை கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டபோதிலும் மிகுதி நிலுவைகள் இதுவரைக்கும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. மேலும் உள்ளூராட்சி ஆணையாளரினால் கல்முனை மாநகர சபைக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இந் நிலுவையினை சீர் செய்யுமாறு |

| | | | |
|---|---|---|---|
| | குவித்து இடமாற்றம் செய்வதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,725,342 தொகை மூன்று வருடங்களாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் நிதிக்கூற்றில் தொடர்ச்சியாக காணப்படுகின்றது. | வேண்டும். | அறிவுறுத்தப்பட்டிருந்தும் அவர்களினால் சீர் செய்யப்படவில்லை. மேற்கொண்டு உள்ளுராட்சி ஆணையாளரின் ஆலோசனைகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 1992ம் ஆண்டு முதல் 2015 வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணம் ரூபா 671,710 தொகை இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளில் இருந்து சட்டப்படி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறிப்பிட்ட நிலுவைகளை பதிவளிப்பு செய்ய உள்ளுராட்சி ஆணையாளரின் கடிதத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (இ) | அங்காடி வர்த்தக குத்தகை நிலுவை ரூபா 15,000 தொகை 2008 இலிருந்து 10 வருட காலமாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த நிலுவைகளை கணக்குகளில் இருந்து சட்டப்படி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2008 ஆம் ஆண்டின் அங்காடி வர்த்தக குத்தகையாளரான திரு.கா.வெற்றிவேல் என்பவரின் நிலுவை தொகையாகும். குறிப்பிட்ட நபர் மரணமடைந்த காரணத்தினால் குறிப்பிட்ட தொகையினை அறவீடு செய்ய முடியாமல் காணப்படுகின்றது. குறிப்பிட்ட தொகையினை பதிவளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஈ) | கடற்கரைப் பூங்கா குத்தகை நிலுவை ரூபா 26,000 தொகை 2015 இலிருந்து இதுவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கடற்கரைப் பூங்கா குத்தகை நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து சட்டமுறைப்படி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறிப்பிட்ட நிலுவை தொகை தொடர்பாக குறிப்பிட்ட நபரிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இணக்க சபையூடாக நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன். |

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ள Hutch மற்றும் Airtel ஆகிய 02 தொலைத்தொடர்பு கோபுரங்களின் நிர்மாணிப்பு மற்றும் கட்டட அனுமதி இதுவரை பெறப்படாமல் உள்ளது. | சபையின் நிர்வாக எல்லைக்குள் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் போது கட்டட அனுமதி மூலம் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் விடயத்திற்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட உபவிதிகள் அவற்றிக்கான அனுமதிகள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சபைக்கு பொருத்தமான ஏனைய விடயங்கள் தொடர்பிலும் துணைவிதிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017ம் ஆண்டு சபையினால் திண்மக்கழிவு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் பொதுமக்களுக்கு 5,000 திண்மக் கழிவு சேகரித்தல் பைகள் வழங்கல் திட்டமானது | மக்களுக்கு திண்மக் கழிவு தொடர்பான முறையான விழிப்புணர்வு வழங்கப்பட்டு சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளை அவர்களிடமிருந்து தரம் பிரித்து | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும் என்பதனை |

| | | |
|---|---|---|
| ஏற்படுத்தப்பட்டு 4,748 பைகள் விநியோகித்திருந்தும், தற்போது திண்மக் கழிவு பிரித்தெடுக்கப்படாமல் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்டு வருகின்றது. | பைகளில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தெரிவித்துக்கொள்கின்றேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் கண்டு அதனை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக ஏற்படும் குறைபாடுகளை சீர் செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அலுவலகக் கட்டிட காணி மற்றும் சபையின் கலாச்சார மண்டபக் காணி இதுவரைகாலமும் காரைதீவு பிரதேச செயலாளரினால் முடிக்குரிய காணி கட்டளைச் சட்டம் பிரிவு 27 இன் கீழ் பாரதீனப்படுத்தப்படாமல் உள்ளது. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையில் 05 வகையான பதவிக்கு 06 பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட வெற்றிடங்களுக்காக பதிலீட்டு அடிப்படையில் ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் வெற்றிட விபரங்கள் நிரப்பப்படுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளர், அமைச்சின் செயலாளருக்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையின் 07 உத்தியோகத்தர்களின் ரூபா 40,647 பெறுமதியான ஊழியர் கடனானது 2006ஆம் ஆண்டிலிருந்து | கடன் நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான | தற்போது அவ் கடன் நிலுவை மீதிகளை பதிவளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள்ப்பட்டுள்ளதுடன் அறவிடக்கூடியவர்களிடமிருந்து அறவிடவும் திர்மானிக்கப்பட்டுள்ளது என்பதினை |

| | | |
|---|---|---|
| நிலுவையாக உள்ளது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1987அம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 350 வர்த்தக நிலையங்கள் மற்றும் 5,660 வீடுகள் மீது 2003ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 3,000,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது. | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி யடைந்த பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம். | சோலை வரிகள் தொடர்பாக கடந்த 10.08.2018 ஆம் திகதிய சபையின் தீர்மானத்துக்கு அமைய காரைதீவு பிரதேச சபை எல்லைக்குபட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் வறிய நிலையில் உள்ளதாக உறுப்பினர்கள் சுட்டிகாட்டியதற்கமைவாக இவ் நடவடிக்கை இரு வருடம் பிற்போடப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்பட்டு வருகின்ற வியாபார நிலையங்களில் ஒன்றுக்கு மேற்பட்டதாக நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பதாதைகளுக்கான விளம்பரக் கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக இதுவரை காலமும் துணைவிதிகள் உருவாக்கப்படாமையால் சபையானது வருடாந்தம் ரூபா 100,000 விளம்பரக் கட்டண வருமானத்தை இழந்துவருகின்றது. | விளம்பரம் தொடர்பான துணைவிதிகளை விதிப்பதன் மூலம் விளம்பரக் கட்டணங்களை அறவிட்டு சபையினது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எம்மால் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக உபவிதிகள் தயாரிக்கப்பட்டு மாகாணசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டு இருந்தும் குறிப்பிட்ட காலத்தினுள் அவ் அனுமதிகள் கிடைக்கப்பெறவில்லை இதனால் அவ்விடயம் சார்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது. எனினும் ஏனைய சபைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளுக்கமைவாக அவ் விதிமுறைகளை பின்பற்றி எமது சபையிலும் இக் கட்டண அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை அறியத்தருகின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிலையான சொத்துப் பதிவேடு மீளாய்வாண்டில் இற்றைப்படுத்தப்படாமல் உள்ளது. | நிலையான சொத்துப் பதிவேடுகள் முறையாக இற்றைப்படுத்தி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கூடிய கவனம் எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் தயாரிக்கப் பட்டு தற்போது பாவனையில் உள்ள உழவு இயந்திரப் பெட்டி ஒன்று இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உழவு இயந்திரப் பெட்டியின் வாகன இலக்கத் தகடு மற்றும் இலக்கத்தகடு பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கூடிய கவனம் எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |

3.5.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 03 மோட்டார் சைக்கிள், 02 மோட்டார் லொறி, 04 உழவு இயந்திரப் பெட்டிகள் ஆகிய 09 வாகனங்கள் திருத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தும், திருத்தம் மேற்கொள்ளாமல் காணப்படுகின்றது. | வாகனங்களை வருடாநத் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைக்கமைவாக அகற்றுவதற்கான அல்லது திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான சட்டப் படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிட்ட வாகனங்களை திருத்தம் செய்யும் செலவினை விட அதன் பாவனை குறைவாக காணப்படும் எனும் காரணத்தினால் அவற்றினை திருத்தம் செய்யாது காணப்படுவதுடன் குறிப்பிட்ட வாகனங்களை பிரதி பிரதம செயலாளர் - பொறியியல் கி.மா ஊடாக அகற்ற அல்லது ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.5.4 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வடகிழக்கு கரையோர சமூக அபிவிருத்தி திட்டத்தின் (NECCDEP) நிதியுதவியின் கீழ் ரூபா 14,347,200 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு 2009ம் ஆண்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்ட கடைத் தொகுதியில் 20 கடையறைகள் காணப்படுகின்ற போதிலும் 04 கடையறைகள் மாத்திரம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. மினுதி 16 கடையறைகள் 10 வருட காலமாக எதுவித பயனுமின்றி விளைவற்றுக் காணப்படுகின்றது. | கட்டட கடையறைகளை வாடகைக்கு வழங்க முயற்சிக்க வேண்டும் அல்லது வேறு தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது சந்தையின் கீழ் தளப்பகுதியல் சபையின் தீர்மானத்துக்கு அமைய **Food City** ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட கட்டடத்தினை பூரணமாக செயற்பாடுடையதாக மாற்றியமைக்க முடியும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) திண்மக்கழிவு இடமாற்று நிலையத்தின் குப்பைகள் பிரித்தெடுத்து பசளை தயாரிப்பதற்கான வசதிக்கு மாகாண குறித்தொகுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை நிதியின் கீழ் | குறிப்பிட்ட கட்டடத்தில் பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டு குறிப்பிட்ட கட்டடம் கட்டப்பட்டிருந்தும் பசளை தயாரிப்புக்கான இயந்திரம் 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கிடைக்கப்பெற்றது. குறிப்பிட்ட இயந்திரம் கிடைக்கப்பெற்ற பிற்பாடு |

| | | |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ரூபா 1,367,782 பெறுமதியான கட்டிடம் மற்றும் 2018ம் ஆண்டு வழங்கப்பட்ட ரூபா 01 மில்லியன் பெறுமதியான பொருட்கள் 2019 மே 07ஆந் திகதி வரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் பயனற்று காணப்படுகின்றது. | | இங்கு பசளை தயாரிப்பு நடவடிக்கை பரிட்சார்த்தமாக சனிக்கிழமைகளில் மட்டும் இடம்பெற்று வருகின்றது. இருந்தும் தற்பொழுது அவ் நடவடிக்கையினை பூரணமாக வாரத்தில் முழுநாட்களும் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனபதனை தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். |